# IMPACT OF CARTOON FILMS AND TELE DRAMA ON CHILDREN – A PSYCHOLOGICAL STUDY

N.Prageesh
Temporary Assistant Lecturer, Philosophy & Value Studies
Eastern university of Srilanka
pragee93@gmail.com

**Abstract**

Psychology is a learning and application discipline that scientifically examines the functions and behaviours of the mind. The word psychology derives from the Greek word psyche and logia, and psyche refers to the soul or soul, and logia refers to knowledge or wisdom. It is thus seen as the field of study of the psyche of man. Although psychology has a long history, it is noteworthy that it is currently undergoing research in the fields of general psychology, abnormal psychology, psychotherapy, psychiatry, social psychology, criminal psychology, educational psychology, child psychology, and industrial psychology. The study of child and child psychology, from the appearance of a baby in the womb to the mother's 18-year-old child. Kehal, a child psychologist, is 5 years old. 5 - 10 years old. He discriminates between 10 - 16 years of age. Children and boys learn a variety of things at their own age and vice versa. Children depend on their parents and adults in such matters. However, when parents and adults' participation in charitable matters diminishes, children tend to self-declare through other matters. It is an obvious fact that in most cases of this kind of spontaneity, parents are giving way to their children. Accordingly, parents have direct contact with their children on television in order to improve the notification of the child. Through this the boys learn many things. Over time, however, children become addicted to television. At first, the child who is less interested in television develops the idea that it will eventually become a pastime and then the world. Cartoons and cartoons often feature in television shows that have enslaved children and children. In the early days, small fantasies and realistic images were designed to make thought into caricatures. With the help of Animation, cartoons have evolved into new series of cartoons and cartoons. There are countless cartoons in the present, with a single protagonist as the leader. Today's parents often watch cartoons for all things childish, feeding and learning. Through this, children learn many answers. However, it is noteworthy that children are physically and psychologically altered by their addiction to caricatures.

**Keywords**: caricatures, cartoons, television, children, children

### ஆய்வு அறிமுகம்

உளவியல் அல்லது மனோதத்துவம் (Psychology) என்பது மனதின் செயல்பாடுகள் மற்றும் நடத்தைகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்யும் கற்கை மற்ளறும் பயன்பாட்டு ஒழுங்கு முறையாகும். Psychology எனும் பதமானது Psyche மற்றும் Logia எனும் கிரேக்கச் சொல்லிருந்து தோற்றம் பெற்றதுடன் Psyche என்பது உள்ளம் அல்லது ஆத்மாவினையும் Logia என்பது அறிவு அல்லது ஞானத்தினை சுட்டுகின்றது. இதனடிப்படையில் மனிதனின் உளத்தினைப்பற்றிக் கற்கும் துறையாக இது காணப்படுகின்றது.இவ்வாறான உளவியலானது நீண்டதான வரலாற்றைக் கொண்டிருப்பினும் தற்காலத்தில் பொது உளவியல், அசாதாரண உளவியல், உளவளத்துணை உளவியல், விருத்தி உளவியல் சமூக உளவியல், குற்றவியல் உளவியல், கல்வி உளவியல், சிறுவர் உளவியல், கைத்தொழில் உளவியல் போன்ற பல துறைகளில் தனது ஆய்வினை மேற்கொளகின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஒரு குழந்தை தன் தாயின் கருவிலே தோன்றுதல் முதல் குழந்தையின் 18வது வயதான சிறு பராயம் வரை, குழந்தை மற்றும் சிறுவர் உளவியல் ஆய்வு செய்கின்றது. இக்காலகட்டங்களை சிறுவர் உளவியலாளரான கெகல் 0-5 வயது, 5-10 வயது, 10-16 வயது போன்ற காலகட்டங்களாக பாகுபடுத்துகின்றார். இவ்வாறான வயதுக் கட்டங்களில் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் பலதரப்பட்ட விடயங்களைத் தன்னளவிலும் பிற விடயங்களின் துணை கொண்டும் அறிந்து கொள்கின்றனர்.

இவ்வாறான அறிகை விடயங்களில் பிள்ளைகள், தமது பெற்றோர்கள் மற்றும் பெரியவர்களைச் சார்ந்து நிற்கின்றது. எனினும் அறிகை விடயங்களில் பெற்றோர் மற்றும் பெரியோர்களின் பங்களிப்புக்கள் குறைவடைகின்ற வேளை பிள்ளைகள் பிற விடயங்கள் மூலமாக சுய அறிவினைப் பெற்றுக் கொள்ள எத்தனிக்கின்றனர். இவ்வாறான தன்னிச்சை அறிகை விடயங்களில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமது பிள்ளைகளுக்கு பெற்றோர்களே வழியமைத்துக் கொடுக்கின்றனர் என்பது வெளிப்படையான உண்மையாகவே காணப்படுகின்றது.இதனடிப்படையில் பிள்ளையின் அறிவினை மேம்படுத்தும் நோக்கில் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளைத் தொலைக்காட்சியுடன் நேரடித் தொடர்பினை ஏற்படுத்தி விடுகின்றனர். இதன் மூலம் சிறுவர்கள் பல விடயங்களை அறிந்துகொள்கின்றனர். எனினும் காலப் போக்கில் சிறுவர்கள் தொலைக்காட்சிக்கே அடிமையாகிவிடும் நிலை தோற்றம் பெறுகிறது. ஆரம்பத்தில் குறைந்தளவு தொலைக்காட்சியில் ஆர்வம் காட்டும் பிள்ளை நாளடைவில் அதனைத் தன் பொழுது போக்காகக் கொண்டு பின்னர் அதனையே உலகம் எனக் கருதும் சிந்தனை வளர்ந்துவிடுகின்றது. இவ்வாறு குழந்தைகள் மற்றும் சிறுவர்களை தன்னிடம் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் தொலைக்காட்சி நிகழ்வில் பெரும்பாலும் கேலிச்சித்திரத் தொடர் நாடகங்கள் மற்றும் கேலிச்சித்திரத் திரைப்படங்கள் முன்னிலை வகிக்கின்றன. ஆரம்ப காலங்களில் சிறு கற்பனை, யதார்த்தத்திற்குரிய உருவங்களை சிந்தனைக்கு எட்டிய வகையில் வடிவமைத்து கேலிச்சித்திரங்களை உருவாக்கினர். கேலிச்சித்திரங்களை தொடர்களாக உருவாக்கும் வண்ணம் உயிர்ப்பியக்க (Animation) உதவியுடன் கேலிச்சித்திர உருவாக்கக் கம்பனிகளின் மூலமாக புதிய பரிணாமத்தில் கேலிச்சித்திரத்தொடர் நாடகங்களாகவும், கேலிச்சித்திரத் திரைப்படங்களாகவும் தோற்றம் பெற்றன. தற்காலத்தில் தனி ஒரு கதாநாயகனை தலைவனாகக் கொண்டு எண்ணிலடங்கா வகையில் பல கேலிச்சித்திரத் தொடர்கள் தோற்றம் பெற்றவண்ணமே உள்ளன.பிள்ளையினை அமைதிப்படுத்தல், உணவூட்டுதல், கற்றல் வழிகாட்டுதல் போன்ற அனைத்து விடயங்களிற்கும் இன்றைய பெற்றோர்கள் பெரும்பாலும் கேலிச்சித்திரத் திரைப்படத்தினை பிள்ளைகளிற்கு காண்பிக்கின்றனர். இதன் மூலம் பிள்ளைகள் பல விடையங்களை அறிந்து கொள்கின்றனர். எனினும் நாளடைவில் கேலிச்சித்திரத் திரைப்படங்களிற்கே அடிமையாக்கப்பட்டு கட்டுண்டு கிடப்பதுடன் உடலியல் மற்றும் உளவியல் ரீதியில் சிறுவர்களின் நிலை மாற்றமடைகின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகவே உள்ளது.

**திறவுச் சொற்கள்** : கேலிச்சித்திரத் திரைப்படங்கள், கேலிச்சித்திர நாடகங்கள், தொலைக்காட்சி, சிறுவர்கள், குழந்தைகள்

**கேலிச்சித்திரத்தின் அறிமுகம் (Introduction to Cartoon)**

ஆரம்ப கால மனிதன் தான் கண்ட எண்ணங்களையும் நிகழ்வுறும் சம்பவங்களையும் தன்னால் வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயங்களையும் பாறைகளில் வரைந்து வர்ணம் பூசும் ஆற்றலை பொழுதுபோக்காக கொண்டிருந்தான். இத்தகைய ஓவியங்களில் மரங்கள், செடிகொடிகள், நீர்நிலைகள், பறவைகள், மிருகங்கள், நீர்வாழ் உயிரினங்கள், மனிதர்கள் போன்றவற்றை வரைந்து தன் எண்ணங்களை வெளிப்படுத்தினான். ஓவியங்கள் வரையப்பட்டாலும் வரையப்பட்ட ஓவியங்களில் பொருளுக்குப் பொருள் சரியான அளவுத் திட்டம் பேணப்படாமை, உருவங்களை கேலியாக வரைதல், நடைமுறையில்லாத கற்பனை உருவங்களை வரைதல் போன்ற புதுப்பாணியில் கலைகள் வரையப்பட்டதனூடாக கேலிச்சித்திரம் (Cartoon) எனும் எண்ணக்கரு தோற்றம் பெற்றது

“கார்டோன்” என்னும் இத்தாலிய மொழியிலிருந்து தோற்றம் பெற்ற இச்சொல் ஆங்கிலச் மொழியில் கார்ட்டுன் (Cartoon) என அழைக்கப்படுகின்றது. இத்தாலிய மொழியில் “கார்டோன்” எனவும் ஆங்கில மொழியில் கார்ட்டுன் எனவும் அழைக்கப்படுகின்ற இச்சொல் கெட்டியான காகிதத்தை குறைகின்றது. கி.பி1821ல் பிரித்தானியாவின் புதிய பாராளுமன்றக் கட்டடத்தை அலங்கரிப்பதற்காக ஓவியர்களை தேர்ந்தெடுக்கும் போட்டிகள் நடைபெற்றன. இடம்பெற்ற இப்போட்டியில் பங்கு கொண்ட ஓவியர்கள் தங்கள் திறனை

வெளிப்படுத்தி அங்கம் பெறுவதற்காக கெட்டியான தாள்களை பயன்படுத்தி தமது எண்ணக்கருக்களை வரைந்தனர். எனினும் கெட்டியான தாள்களில் வரையப்பட்ட பெரும்பாலான ஓவியங்கள் தகுதியற்றவை என பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டன இவ்வாறாக நிராகரிக்கப்பட்ட ஓவியங்கள் ஒவ்வொன்றும் கருப்பொருள் விளங்கப் பெற்று பிரித்தானியாவின் “பஞ்ச்” எனும் பத்திரிகையின் ஊடாக அனைத்தும் பிரசுரிக்கப்பட்டது இவ்வாறாக பிரசுரிக்கப்பட்ட சித்திரங்கள் காலப்போக்கில் கேலிச்சித்திரம் (Cartoon) என பெயர் பெற்றது. (http://www.sciper.org/browse/PU_desc.html)

இத்தகைய நடைபாதையில் பரிணாமம் பெற்ற கேலிச்சித்திரம் (Cartoon) மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பினைப் பெற்று காணப்பட்டதுடன் மக்கள் அதுவரையில் பார்த்திராத விசித்திர வரைபிலும் அதேபோல குறிப்பிட்ட சம்பவங்களை பார்த்தவுடன் பதிய வைக்கும் கேலிச்சித்திர வரைபுகளை இரசிக்கும் இரசிகர்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருந்தனர். பொழுதைக் கழிப்பதற்காகவும், தகவலை பரிமாறும் தடயமாகவும் ஆரம்ப காலங்களில் வரையப்பட்ட சித்திரங்கள் நாளடைவில் வினோதமான உருப்பெற்று பத்திரிக்கை ஊடகங்களில் கேலி சித்திரங்களாகவும் பின்னர் கணனியின் அனிமே'ன் வகையில் உருப்பெற்று நடைபெற்றது. மக்களால் அதுவரையில் பத்திரிகைகளில் கண்டுகளித்த கேலிச்சித்திரங்கள் அசையும் தன்மையில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது அனைவருக்கும் ஆச்சரியமான ஒன்றாகவே காணப்பட்டது.

அன்றைய காலம் தொடக்கம் மக்களால் இரசிக்கப்பட்ட கேலிச்சித்திரம் (Cartoon) சம்பவங்களைத் தொடராகக் கூறிய அதேவேளை நகைச்சுவையூட்டும் தன்மையையும் வெளிப்படுத்தியிருந்தது நாளுக்கு நாள் பார்வையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்த அதே வேளை இளம் தலைமுறையினரான குழந்தைகள் மற்றும் சிறுவர்களை அதிகம் விரும்பிப் பார்த்ததுடன் நாளடைவில் இவர்கள் கார்ட்டுன்களுக்கு அடிமையாகும் தன்மையும் காணப்பட்டது. இன்றைய காலகட்டத்தில் கேலிச்சித்திரம் (Cartoon) வணிக, மற்றும் தனிப்பட்ட நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டவையாக காணப்படுகின்றன. கேலிச்சித்திர நிகழ்ச்சிகள் அண்மைக்காலங்களாக பிள்ளைகளிடத்தில் ஒரு முக்கியமான பொழுதுபோக்கு நிகழ்ச்சியாகவும் மாறிவிட்டது.

**கேலிச்சித்திரத் தொடர் மற்றும் திரைப்படங்கள் மூலம் சிறுவர்கள் பெறுகின்ற சாதக விளைவுகள்**

ஆய்வுப்பிரதேசமாகத் தெரிவுசெய்யப்பட்ட மட்டக்களப்பு மண்முனை தென்னெருவில்பற்று பிரதேசசெயலகத்தின் கோட்டைக்கல்லாறு பிரதேசத்தில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய பிரிவுகளிலுமிருந்து எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்ட 50 சிறுவர்களுக்காக வழங்கப்பட்ட வினாக்கொத்தின் மூலம் சாதக விளைவு கண்டறியப்பட்டது.

கேலிச்சித்திர தொடர் நாடகங்கள் மற்றும் கேலிச்சித்திர திரைப்படங்கள் தொடர்ச்சியான உரையாடல் தன்மை கொண்டு காணப்படுவதனால் அவற்றினை உன்னிப்பாக அவதானிக்கின்ற சிறுவர் தாங்கள் பேசுகின்ற சந்தர்ப்பங்களில் சரியான மற்றும் தெளிவான விதத்தில் சொற்களை உச்சரிக்கும் தன்மை பெற்று காணப்படுவர். அதுமாத்திரமன்றி கேலிச்சித்திரங்களில் உச்சரிக்கப்படுகின்ற ஆங்கில மொழி உச்சரிப்பினை சிறுவர்கள் பொதுவான இடங்களில் இலகுவாக உச்சரிக்கவும் அதற்கான அர்த்தத்தை பொருத்தமான நேரத்தில் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தக் கூடிய ஆற்றல் சிறுவர்களிடத்தே வளர்கிறது.

மையக் கருத்துக்களினூடாக கதையினை நகர்த்திச் செல்கின்ற முக்கிய கதாப்பாத்திரங்கள் பெரும்பாலும் எதிரிகளிடம் இருந்து மக்களை காப்பாற்றுவது, பிறருக்கு உதவி செய்தல், கெட்ட விடயங்களை ஒழித்தல், சுறுசுறுப்பாக இயங்குதல் போன்ற செயல்களை மேற்கொள்பவர்களாக அமைக்கப்பட்டிருக்கும்இத்தகைய கேலிச் சித்திரங்களின் கதாபாத்திரங்கள் மேல் விருப்புக் கொண்ட சிறுவர்கள் இக் கதாபாத்திரங்களை போல தாமும் சமூகத்திற்காக நல்ல விடயங்களைச் செய்ய வேண்டும் எனும் உணர்வு சிறுவர்கள் மத்தியில் ஏற்படுகிறது இதனால் எதிர்காலங்களில் தலைவர்களாக உருவாகின்ற சிறுவர்கள் சமூக எண்ணம் கொண்டு காணப்படுவர் என்பது கேலிச்சித்திரம் சார் நன்மையாக காணப்படுகிறது.

**கேலிச்சித்திரம் தொடர் மற்றும் கேலிச்சித்திர திரைப்படங்களின் மூலம் அவர்கள் எதிர்கொள்ளும் பாதக விளைவுகள்**

கோலிச்சித்திரத் தொடர் நாடகங்கள் மற்றும் கேலிச்சித்திரத் திரைப்படங்கள் சிறுவர்களைப் பல பாதக விளைவிற்கு இட்டுச் செல்கிறது. இத்தகைய பாதக விளைவுகள் உடலியல் சார் பாதக விளைவுகள், உளவியல்சார் பாதக விளைவுகள் என இரண்டு வகையாக வகைப்படுத்தி நோக்கப்படுகிறது.

**உடலியல் சார் பாதக விளைவுகள்**

மணிக்கணக்கில் சிறுவர்கள் தொலைக்காட்சியின் முன் உறைந்து கிடைப்பதன் மூலம் இவர்களது பார்வை தொலைக்காட்சியின் திரையினை நோக்கியே அமைந்திருக்கும். தொலைக்காட்சி வர்ணத்திரையென்பதாலும் கேலிச்சித்திரங்களில் அதிகளவிலான வர்ணங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றமையாலும் அதிகமான அளவில் திரையிலிருந்து வெளிப்படுகின்ற தொலைக்காட்சியின் ஒளி சிறுவர்களின் கண் விழித்திரையில் விழுந்து பிரிகையடைகிறது. இவை தொடர்ச்சியான செயற்பாடாக மாறிவிடும் சந்தர்ப்பங்களில் விழித்திரையின் மையப்புள்ளியில் விம்ப ஒளியின் விலகல் ஏற்பட்டு குறும்பார்வைக் குறைபாடு மற்றும் நீள் பார்வைக் குறைபாடுகள் ஏற்பட வாய்ப்பாக அமைகின்றது. இக்காரணங்களால் எதிர்காலங்களில் சிறுவர்கள் கண்ணாடியின் துணை கொண்டு பார்வையினை அறியப்படும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பாக அமைகின்றன.

கேலிச்சித்திர தொடர் மற்றும் கேலிச்சித்திர திரைப்படங்களை சிறுவர்கள் தொடர்ச்சியாக பார்க்கின்ற சந்தர்ப்பங்களில் மூளை மற்றும் உடல் சோர்வடைவதுடன் தலையிடி, கண்ணால் நீர் வடிதல், கண் வலி, கண் எரிதல் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன இந்த நோய்கள் தொடர்ச்சியாக ஏற்படுமெனில் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் இயல்பாக பாதிக்கப்படுமென்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மேலும் கேலிச்சித்திர திரைப்படங்களையும் கேலிச்சித்திர தொடர் நாடகங்களையும் சிறுவர்கள் மணிக்கணக்கில் இரசிக்கின்றனர் இதனால் சிறுவர்கள் வெளி விளையாட்டுகளில் ஈடுபடுவதில் ஆர்வம் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர். சிறுவர்களை பொறுத்தவரையில் விளையாட்டானது அவர்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகைகளில் இன்றியமையாத ஒன்றாகும் மேலும் விளையாட்டுகளில் ஈடுபடுவதன் மூலம் சிறுவர்களின் உடற் சம நிலைகள் சரியான முறையில் மேம்படுத்தப்படுவதுடன் உடல் ஆரோக்கியமும் மேம்படுகிறது.

ஆனால் சிறுவர்கள் கேலிச்சித்திரத் தொடர் மற்றும் கேலிச்சித்திரத் திரைப்படங்களில் தங்களுடைய முழுப் பொழுதையும் கழிப்பதனால் வெளி விளையாட்டுக்களில் ஈடுபட இவர்களுக்கு சந்தர்ப்பமில்லாமற் போகின்றது. வெளி விளையாட்டுகளில் சிறுவர்கள் ஈடுபடாமை காரணமாக அவர்களது உணவுச் சமிபாட்டுச் செயன்முறையானது மந்தகதியில் செயற்படுகின்றது. இதனால் மூன்று வேளை உட்கொள்ளவேண்டிய உணவிற்குப் பதிலாக இரண்டு வேளை உணவினை சிறுவர்கள் உட்கொள்வதன் மூலம் உடல் மெலிதல் போன்ற நோயும் உட்கொண்ட உணவு விரைவில் சமிபாடடையாமையினால் உடல் பருமன் அதிகரித்தல் போன்ற நோயும், குறிப்பிட்ட நேரத்தில் உணவினை உட்கொள்ளாமையால் இரைப்பையினுள் அமிலச் சுரப்பிகள் அதிகம் சுரப்பதன் காரணமாக குடற்புண் போன்ற நோயும் ஏற்பட வழிவகுக்கிறது. இவை அனைத்தும் கேலிச் சித்திர தொடர் நாடகம் மற்றும் கேலிச்சித்திர திரைப்படங்கள் மீது சிறுவர்கள் கொண்ட ஆர்வத்தில் வெளிவிளையாட்டுகளை விரும்பாமையின் விளைவுகளால் ஏற்படுகின்றமையாகும்.

ஆய்வுப்பிரதேசமாகத் தெரிவுசெய்யப்பட்ட மட்டக்களப்பு மண்முனை தென்னெருவில்பற்று பிரதேசசெயலகத்தின் கோட்டைக்கல்லாறு பிரதேசத்தில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய பிரிவுகளிலுமிருந்து எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்ட சிறுவர்களில் 72மூ சிறுவர்கள் ஏலவே கூறப்பட்ட உடலியல் சார் பிரச்சினைகளுக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**உளவியல்சார் பாதக விளைவுகள்**

கேலிசித்திர தொடர் நாடகம் மற்றும் கேலிச்சித்திர திரைப்படங்கள் சிறுவர்கள் மத்தியில் உளவியல்சார் பாதக விளைவினை ஏற்படுத்துகிறது. கோட்டைக்கல்லாறு பிரதேசத்தின் வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு ஆகிய

கிராமசேவகர் பிரிவிலிருந்து எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்ட 50 மாதிரிகளை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் பல உளவியல் பிரச்சினைகள் இனம் காணப்பட்டன. இவ் ஆய்வின் பொதுமையாக்கமாக தொகுத்து நோக்குகின்ற போது கேலிச்சித்திரத் தொடர் நாடகங்கள் மற்றும் கேலிச்சித்திரத் திரைப்படங்களை சிறுவர்கள் பார்க்காத நேரங்களிலும் கேலிச்சித்திர எண்ணங்கள் சிறுவர்கள் மத்தியில் காணப்படல், தங்களையும் கேலிச்சித்திர கதாபாத்திரங்கள் போல கற்பனை செய்தல், சமூகங்களிலும் உறவுகளிலும் நாட்டம் இல்லாத தன்மை, வயதிற்கு மீறிய நடத்தைக் கோலம், பிடிவாத குணத்துடனான ஒழுக்கமீறுகைச் செயற்பாடு, மொழித்திறன் உச்சரிப்பில் மாற்றம், கற்றல் சார் செயற்பாடுகளில் ஆர்வமின்மை போன்ற உளவியல் பிரச்சினைகள் சிறுவர்களிடத்தே காணப்படுகின்றது.

கேலிச்சித்திர தொடர் மற்றும் கேலிச்சித்திர திரைப்படங்களை சிறுவர்கள் பல மணி நேரக்கணக்கில் பார்வையிடுகின்றனர். அவர்களுக்குப் பிடித்தமான கேலிச்சித்திர கதாபாத்திரங்களின் ஊடாக சிறுவர்கள் கவரப்பட்டு கேலிச்சித்திரங்களை பார்க்காத நேரங்களிலும் கேலிச்சித்திர எண்ணங்களுடன் சிறுவர்கள் காணப்படுவதாக ஆய்வின் மூலம் அறிய முடிந்தது. மேலும் கேலிச்சித்திரங்களின் எண்ணங்கள் சிறுவர்களின் மத்தியில் அளவுக்கதிகமாகக் காணப்படுமெனில் அவர்களது கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்படுமென்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவர்கள் கேலிச்சித்திர தொடர் மற்றும் கேலிச்சித்திர திரைப்படங்களை விரும்பி இரசிக்கின்றனர் அதிலும் கேலிச்சித்திர தொடர்களையே சிறுவர்கள் அதிகம் விரும்புகின்றனர். இத்தொடர்களில் வருகின்ற பாத்திரங்களை உண்மையானவை என்று எண்ணிக்கொண்டு அப்பாத்திரங்களைப் போல தம்மையும் கற்பனை செய்து கொள்கின்றனர். இத்தகைய உளவியல் பண்பினை டோராவின் பயணங்கள் எனும் கேலிச்சித்திரம் ஏற்படுத்துவதாக கள ஆய்வின் மூலம் அறியமுடிந்தது. இதனை கொண்டு நோக்குகின்ற போது சிறுவர்களும் தங்களை கேலிச்சித்திர கதாபாத்திரங்கள் போல எண்ணிக்கொண்டிருக்கும் உளவியல் மாற்றம் எதிர்காலத்தில் சிறுவர்களை புத்தியற்ற மந்தமான சமூகமாக உருவாக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

கேலிச்சித்திரங்களில் அளவுகடந்த ஆர்வம் கொண்ட சிறுவர்கள் தம்மை முழுமையாக கேலிச்சித்திரங்களுக்கு அர்ப்பணித்து விடுகின்றனர். இதனால் குடும்ப உறவினர்களின் மீது ஆர்வமற்ற மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட போக்கினைக் கொண்டு காணப்படுகின்றனர். இத்தனிமைப்படுத்தப்பட்ட பண்பானது சிறுவர்களை எதிர்காலங்களில் சுயநல தன்மைக்கு இட்டுச் செல்லும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய உளவியல் சார்பான மாற்றங்கள் சிறுவர்களை அவர்களின் குடும்பங்களிலிருந்து தனிமைப்படுத்தி வைப்பதுடன் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களி மீதான பற்றற்ற தன்மையினையும் ஏற்படுத்துகிறது.

கேலிச்சித்திர தொடர் நாடகங்கள் மற்றும் கேலிச்சித்திர திரைப்படங்களில் கதையின் கருவிற்கு ஏற்ற வகையில் பல்வேறு கதாப்பாத்திரங்களின் மூலம் கதை நகர்த்தப்பட்டுச் செல்லப்படும். இக் கதாப்பாத்திரங்கள் யாவும் வெவ்வேறு வயதடிப்படையில் காணப்படுவதுடன் பாத்திரங்களின் வயதிற்கு ஏற்ப அவர்களின் செயற்பாடுகளும் மாற்றமடையும். ஆனால் கேலிச்சித்திரத் தொடர் மற்றும் கேலிச்சித்திரத் திரைப்படங்களைப் பார்வையிடுகின்ற சிறுவர்கள் வயதடிப்படையில் வகைப்படுத்தப்பட்டிருக்கும் கேலிச்சித்திரப் பாத்திரங்களின் செயற்பாடுகள் அனைத்தையும் தனி நபர்களாக முழுவதையும் அறிகின்றனர். இதனால் சிறுவர்கள் தங்களது வயதிற்கு மேம்பட்ட எண்ணங்களைப் பெறுவதன் மூலம் சிறுவர்கள், பெரியவர்களுக்கு எதிர்த்துப் பேசுதல், காதல், பாலியல், போதைப்பொருட்களின் பாவனை போன்ற வயதிற்கு மீறிய எண்ணக்கருக்களை அறிய முற்படுதல் போன்ற தகாத பழக்கவழக்கங்களுக்கு உள்ளாகின்றனர். இத்தகைய உளவில் மாற்றம் சிறுவர்களை எதிர்காலத்தில் குற்றச்செயல்கள் புரியத் தூண்டவைக்கும் என்பதுடன் சிறுவர்களை ஒழுக்க மீறுகைக்ச் செயலிற்குமிட்டுச்செல்கிறது. இவ்வகையில் கேலிச்சித்தித்திரத்தினால் ஏறபடுத்தப்படுகின்றன உளவியல் மாற்றம் சிறுவர் குற்றவாளிகளிகளின் தோற்றம் மற்றும் சிறுவர் நன்னடத்தைப் பிரிவிகளின் பல் பெருகுதன்மை போன்றவற்றிற்கும் வழிவகுக்கும்.

**கேலிச்சித்திரங்களால் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைத்தல்**

மனஅழுத்தங்களின்றி மனமகிழ்வுடன் வளர்கின்ற சிறுவர்கள் எதிர்காலங்களின் தலைவர்களாக உருவாகக்கூடியவர்கள். ஆனால் இவர்களின் மனநிலையினை மாற்றியமைக்கும் வகையில் இன்றைய கேலிச்சித்திரத் தொடர் நாடகங்கள் மற்றும் கேலிச்சித்தித்திரத் திரைப்படங்கள் செயற்படுகின்றன.

யூதர்கள் அதிகம் வாழ்கின்ற நாடான இஸ்ரேல் நாட்டிலிருந்து அதிகளவிலான கேலிச்சித்திரத் தொடர் நாடகங்கள் மற்றும் கேலிச்சித்திரத் திரைப்படங்கள் ஏனைய நாடுகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. ஆனால் இஸ்ரேல் நாட்டில் கேலிச்சித்திரத் தொடர் நாடகங்கள் மற்றும் கேலிச்சித்திரத் திரைப்படங்களை குழந்தைகள், சிறுவர்கள் பார்ப்பதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது. இதனையடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றவேளை கேலிச்சித்திரத் தொடர் நாடகங்கள் மற்றும் கேலிச்சித்திரத் திரைப்படங்களின் மூலம் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் பாதிப்படைகின்றனரென்பது உறுதியாகின்றது.

கேலிச்சித்திர தொடர் நாடகங்கள் மற்றும் கேலிச்சித்திரத் திரைப்படங்கள் மீதான சிறுவர்களுக்கான நாட்டம் அதிகரித்த வண்ணம் காணப்படுகிறது. இவை அவர்களது மத்தியில் உடலியல், உளவியல் சார்பாக பல தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. கேலிச்சித்திரத்தில் சிறுவர்கள் கொண்டுள்ள ஆர்வத்தை சிறிது சிறிதாக குறைத்து அதனை முற்றாக இல்லாமல் செய்தல் இதன் நோக்கமாக காணப்படுகிறது இதனடிப்படையில் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்காக சிறிதளவு நேரத்தை ஒதுக்குதல், சிறுவர்கள் மற்றும் குழந்தைகளை பாதுகாப்பான முறையில் வெளி விளையாட்டுகளில் ஈடுபட செய்தல், சமூக ஆர்வலர்கள், உளவளத்துணையாளர்கள் போன்றவர்களின் ஆலோசனைகள் கேலிச்சித்திரத்தின் விளைவுகள் சார்பாக பெற்றோர்களுக்கு வழங்கப்படுதல், பொழுதுபோக்கினை பயனுள்ள வகையில் பிள்ளைகள் கழிப்பதற்காக பெற்றோர்கள் ஆற்றுப்படுத்துதல் கேலிச் சித்திரத்தின் தாக்கம் பற்றி பாடசாலை ஆசிரியர்களால் சிறுவர்களுக்கு விளங்கும் வகையில் எடுத்துரைத்தல் போன்ற செயற்பாடுகளினூடாக கேலிச்சித்திரங்களால் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்க முடியுமென்பது சாத்தியப்பாடாக காணப்படுகின்றது.

**முடிவுரை**

சிறுவர்களின் எண்ணங்களில் உறைந்துள்ள கேலிச்சித்திரத் தொடர்நாடகங்கள், கேலிச்சித்திரத் திரைப்படங்கள், சிறுவர்களின் மத்தியில் சிறிதளவில் நன்மையினை ஏற்படுத்தியிருப்பினும் பாரியளவு தீமையினையே ஏற்படுத்துகின்றது. இவை சிறுவர்களை அபிவிருத்திப்பதையில் கொண்டு செல்வதனைவிட பெரும்பாலும் அழிவுப்பாதைக்கேயிட்டுச் செல்வதாக அறியமுடிகின்றது. எனவே பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் சிறுவர்கள் சார்பான கவனங்களில் விழிப்படைதலின் மூலமுமே சிறுவர்களின் எதிர்காலம் வழமாகக் கட்டியெழுப்பப்படும். இதனைக் கருத்திற்கொண்டு முடிந்தவரையில் சிறுவர்களின் அறிவினை மேம்படுத்துவதன் வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் வழமான எதிர்காலங்களை சிறுவர்கள் எட்டிப்பிடிப்பர். இதன் மூலம் வளமான மற்றும் ஆரோக்கியமான சமூகக் கட்டமைப்பு எதிர்காலங்களில் தோற்றுவிக்கப்படுமென்பதில் எதுவிதமான ஐயமுமில்லை.

**உசாத்துணைகள்**

**முதல் நிலைத் தரவுகள்**

1. நேர்காணல் (சிறுவர்கள், வைத்திய நிபுணர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள்)
2. வினாக்கொத்து முறை

**இரண்டாம் நிலைத் தரவுகள்**


1. கணேசன்.பி.சி, 2005, "உங்கள் குழந்தைக்கு சிந்திக்கக் கற்றுக்கொடுங்கள்", நர்மதா பதிப்பகம், சென்னை 600017.
2. கிருஷ்ணராஜா.சோ, 2008, "அழகியல்", சேமமேடு பதிப்பகம், கொழும்பு – 11.
3. சிவகுமார்.ம, 2009, "அடிப்படை உளவியல்", சேமமேடு பதிப்பகம், கொழும்பு – 11.
4. பவா.சா, 2007, "தொலைக்காட்சியுலகம்", யுகம் செய்முறை செம்மையாக்கம், சென்னை 600005.
5. மஹ்ரூப் எஸ்.எல்.எம், 2012, "அழகியல் ஓவியக்கலை வரலாறு", லங்கா புத்தகசாலை, கொழும்பு – 11.
6. குணரத்தினம்.வே, 2009, "கணினி விளையாட்டுக்களும் வன்முறையும்", கிழக்கொலி 50வது மலர், ஊழியர்சங்க வெளியீடு, கிழக்குப் பல்கலைக்கழகம்.
7. லோகேஸ்வரன்.ஆர், 2008, "கற்றலைப் பாதிக்கும் காரணிகளும் ஆசிரியர்களும்" அகவிழி.


**இணையத் தேடல்**


1. https://en.wikipedia.org/wiki/Psychology Visit Date - 06..9.2018
2. Visit Date 10.06.2019, Visit Time 1.22PM
3. http://cartoonmuseum.org/explore/history-of-cartoons-comics
   Visit Date 10.06.2019, Visit Time 11.08AM
4. http://multilingualbooks.com/wp/cartoons/european-cartoons/greek-cartoons/
   Visit Date 09.06.2018, Visit Time 03.08PM
5. https://en.wikipedia.org/wiki/Alienators:_Evolution_Continues
   Visit Date 11.06.2018, Visit Time 12.35.PM
6. https://www.imdb.com/list/ls052624514/
   Visit Date 11.06.2018, Visit Time 03.10.PM